

தாம்பரம் காவல் ஆணையரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மணிமங்கலம் காவல் நிலையத்தை இரண்டாக பிரித்து புதிதாக உதயமான படப்பை காவல் நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் திறந்து வைத்தனர். அருகில் தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக், மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உள்ளனர்.



புழல் 24 வது வட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன் இல்லத் திருமணம் ராணி சங்குபதி திருமண மண்டபத்தில் மணமக்கள் எஸ்.யுவராஜ் – டாக்டர் எஸ்.ஏ.அன்புமதி ஆகியோரின் திருமணத்தை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. நடத்தி வைத்து வாழ்த்தினார். இதில் பகுதி செயலாளர் ஜி.துக்காராம் வரவேற்புரை ஆற்றினார். வாழ்த்துரை மிசா பா.மதிவாணன், எஸ்.நந்தகோபால், புழல் எம்.நாராயணன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ், மாவட்ட துணை செயலாளர் ராமகிருஷ்ணன், வட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர். இறுதியாக கே.பி.பி.அறிவழகன் நன்றியுரை ஆற்றினார்.

### முனைவர் க.பொன்முடி, இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை!

## விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி வேண்டுகோள்!

விழுப்புரம், செப். 21 -

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், கண்டாச்சிபுரம் (பேருந்து நிலையம் அருகில்) “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” “ஓரணியில் தமிழ்நாடு” தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் முகையூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்ற உள்ளார் .

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ. ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## 121வது வட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### வட்டச் செயலாளர் டி.ராஜவேலு வேண்டுகோள்!

சென்னை, செப்.21-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’, ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு அவர்களின் தலைமையில், நந்தனம் கி.மதி (மயிலை மேற்கு பகுதி செயலாளர்), எஸ்.முரளி (மயிலை கிழக்கு பகுதி செயலாளர்), கே.ஏழுமலை எம்.சி. (தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் ) ஆகியோரின் முன்னிலையில் இன்று 21.9.2025- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சிலேட்டர் புரம், மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர்), தமிழச்சி தங்கபாண்டியன் (தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்),

ஜெ. கருணாநிதி (தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆகவே 121வது வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA2, BDA, BLC, மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 121வது வட்ட கழகச் செயலாளர் டி.ராஜவேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## மயிலை மேற்குப் பகுதிக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, செப். 21-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!’ ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி.. ஆகியோரின் முன்னிலையில் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5:00 மணியளவில், சிலோட்டர் புரம், மயிலாப்பூர், சென்னை-04 இல் நடைபெறுகிறது.

இதில் கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆகவே மயிலை மேற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, வட்ட கழக செயலாளர்கள் பகுதி நிர்வாகிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞர் அணி தோழர்கள்,BLA, BLA2, BLC மற்றும் BDO. அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி தெரிவித்துள்ளார்.

### கலைஞர் காவியம் உள்ளிட்ட நூல்கள் மறு வெளியீடு!

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப்படம் திறப்பு!

### உலகத் தமிழ் அறக்கட்டளை – வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்துகிறது!

வாசிங்டன், செப். 21-

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் 75 ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியம், (பத்திரிகை) இதழ், சமூகப் பணி ஆகிய துறைகளில் அரிய சேவையாற்றியதையொட்டி உலகத் தமிழ் அறக்கட்டளை (மேரிலாண்டு, அமெரிக்கா) மற்றும் வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப் படத் திறப்பு மற்றும் நோபல் தவம், கலைஞர் காவியம், சேது காப்பியம் ஆகிய நூல்கள் மறு வெளியீடு நிகழ்ச்சி ஹோவர்டு கவுண்டி நூலக அமைப்பு - மத்திய கிளை - மேக்சின் வைட் வார் ஃபீல்ட் அரங்கத்தில் 2.10.2025 மாலை 5.45 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறுகிறது.

அனைத்து தமிழ் அமைப்புகளும் இதில் பங்கேற்று சிறப்பிக்குமாறு உலகத் தமிழ் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் தமிழ் மணிகண்டன் சேதுராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.


